**நீர்ச் சுத்திகரிப்பு மற்றும் ஆரோக்கியத்தினை பலப்படுத்தல் (டபிள்யூஏஎஸ்எச்) செயற்திட்டம் - 2015**

---

நீர்ச் சுத்திகரிப்பு மற்றும் ஆரோக்கியத்தினை பலப்படுத்தல் (டபிள்யூஏஎஸ்எச்) செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சார்க் அபிவிருத்தி நிதியத்திற்கும் இடையில் 2014 திசெம்பர் 17 இல் கைச்சாத்திடப்பட்ட மானிய உடன்படிக்கையின் 3.3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், கமத்தொழில் அமைச்சு நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் கமநல அபிவிருத்தி திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நீர் மற்றும் சூழலியல் தேவைகளிற்காக கிராமிய நீர்ப்பாசன முறைமைகளில் தங்கியுள்ள கிராமிய சமூகங்களின் வாழ்க்கைத்தரத்தின் நிலைத்திருக்கக்கூடிய முன்னேற்றம் மற்றும் மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலுள்ள 2800 குடும்பங்களுக்கு பயனளிக்கும் 09 கிராமங்களிலுள்ள நிர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் முகாமைத்துவத்தில் நீர் பயன்பாட்டு வினைத்திறனை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 119 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.94 மில்லியனானதுடன் முழுத்தொகையும் சார்க் அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 திசெம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 திசெம்பர் 16 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

மொனராகலை மாவட்டத்திலுள்ள 02 கிராமிய தொட்டிகளின் மீளமைப்பு வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 400,000 தொகையான ஆரம்ப முற்பணங்கள் ஏற்பட்ட செலவினங்களாக கருதப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் முதலாவது கணக்காண்டின் போதான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| சார்க் அபிவிருத்தி நிதியம் | 0.94 | 119 | 40.4 | 0.034 | 4.9 |

**3.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நீர் அடிப்படையிலான தீர்மானம் எடுத்தலிற்கான நம்பகமான தரவு வங்கியின் அபிவிருத்தி, சூழல் - முறைமை முகாமைத்துவம் மீதான சாத்தியவள ஆய்வு, நீர் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, காணி உற்பத்தி வரைபடங்கள் மற்றும் காணி பயன்பாட்டு திட்டங்களின் தயாரிப்பு, பொதுத்துறை அலுவலர்களின் பாதுகாப்பு மற்றும் பயிற்சிகளிற்கான நுண்-பள்ளத்தாக்கு பிரதேசங்களை இனங்காணல் போன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் விவசாயிகளின் தலைமைத்துவத் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கதிர்காமம் பிரதேசத்தில் வாழுகின்ற விவசாயிகளிற்காக 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) பந்திக்கு முரணாக நீர் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அலுவலக உபகரணம் என்பவற்றிற்கான மூலப்பொருட்களின் கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவின் அதே உறுப்பினர்கள் அதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர். மேலும், ரூபா 1.56 மில்லியன் பெறுமதியான 223 உருப்படிகளின் கொள்வனவிற்காக மதிப்பாய்வுசெய்யப்பட்ட விலைக்கூறுகளின் மீதான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, உரிய உபகரணங்களின் விபரங்கள் 2015 திசெம்பர் 31 வரையிலும் இருப்பு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.